**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.159/2025**
**Sessions :**
**Deposition of Witness for :PW5 , LW10**

| | |
|---|---|
| Name | திரு.பாலமுருகன் |
| Father's/Husband Name | திரு.சுப்பராயன் |
| Village | |
| Taluk | |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 02nd day of July, 2026**

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. U/s.355 of BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது சித்தாமூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி திரு.மாரியப்பன் காவல் உதவி ஆய்வாளர் என்பவரின் கையெழுத்தும் விசாரணை நடைமுறையும் நன்றாக தெரியும் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 03.04.2022 ம் தேதி காலை 11.30 மணிக்கு மேற்படி காவல் உதவி ஆய்வாளர் திரு.மாரியப்பன் என்பவர் நிலைய பெறுப்பில் இருந்தபோது பரிமளா, க/பெ.துரை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.78/2022 ல் இ.த.ச. பிரிவுகள் 147, 148, 296(பி), 324, 506(2) கீழ் வழக்குபதிவு செய்தார். (**அந்த புகார் மனு அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சதிஷ்குமார் மற்றும் மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை இட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **(அந்த பார்வை மகசர் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையான மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான சதிஷ்குமார் மற்றும் மணிகண்டன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களான சுமன் மற்றும் இளையராஜா ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜெய்கணேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய 2 காயச்சான்றுகள் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 வரையாக குறியீடு செய்யப்படுகிறது).**

4. இவ்வழக்கின் எதிரியான நடராஜன், த/பெ.சின்னதுரை என்பவரை 03.04.2022 அன்று முதுகரை கிராமத்தில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இவ்வழக்கின் மற்ற எதிரிகள் அனைவரும் மாண்புமிகு செங்கல்பட்டு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று சென்றுவிட்டார்கள். வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது 14.04.2022 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-**

5. நான் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி இல்லை என்றாலும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்

சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி தவறான புகாரை பெற்று சம்பவம் இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...இல்லை**

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.